**"வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான மக்களின் நடத்தைகள்: கிண்ணியாப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு"**

**Supervisor**
*Mr. M. Riswan,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. MRF. Fairoosiya,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

சர்வதேச ரீதியாக விபத்துக்கள் குறைவடைந்து கொண்டு செல்கின்றவேளை, ஆசிய நாடுகளில் *அண்மைக் காலமாக விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை* அதிர்ச்சிதரக் கூடிய நிகழ்வாகவே கருதப்படுகின்றது. அண்மைக் காலத்தில் சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பாரிய ஒரு சமூகப் பிரச்சினையாக வீதி ஒழுங்கு *முறைகள் புறக்கணிக்கப்படுதல் காணப்படுகின்றது.* வீதி ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள், திட்டங்கள், விழிப்புணர்வுகள், தண்டனைகள், சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் இதில் மக்களின் *நடத்தையானது வீதி ஒழுங்குகளை மீறுவதாய் உள்ளது.* எனவே கிண்ணியாப் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக மக்களது நடத்தைகள் எத்தகைய நிலையில் உள்ளது என்பதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. மேலும் இவ்வாய்வானது வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக மக்கள் எத்தகைய எதிர்தாக்கங்களை கொண்டுள்ளார்கள் என்பதை கண்டறிதலை பிரதான நோக்கமாகவும், வீதி ஒழுங்குகள் மீறப்படுவதால் ஏற்படும் விளைவுகளையும், வீதி ஒழுங்குகள் தொடர்பாக மக்கள் எத்தகைய விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் என்பதை கண்டறிவதையும், வீதி ஒழுங்குகளை மீறாதவண்ணம் ஆலோசனைகளை முன்மொழிதல் போன்ற துணை நோக்கங்களையும் கொண்டுள்ளது. இது அளவுசார் (Quantitative), பண்புசார் (Qualitative) ஆய்வு என்பதனால் இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம்நிலை, இரண்டாம்நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம்நிலை தரவுக்காக அவதானம் (Observation), நேர்காணல் (Interview), வினாக்கொத்து (Questionnaire), இலக்குக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussion-FGD) போன்றவை மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை MS-Excel, SPSS போன்ற மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம்நிலை தரவுக்காக புத்தகங்கள், இணையங்கள், பிரதேச செயலக அறிக்கைகள், போக்குவரத்து பொலிஸ் பிரிவு அறிக்கைகள் போன்றவை மூலமும் தரவுகள் சேரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வானது கிண்ணியாப் பிரதேசத்தில் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பான மக்களின் நடத்தைகளுக்கு பிரதான காரணம் மக்கள் வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாக போதியளவான அறிவின்மையுடன் காணப்படுகின்றமையே ஆகும் என்பதை முடிவாக உரைக்கின்றது.

**பிரதான சொற்கள் (Key Words) :** வீதி ஒழுங்கு (Traffic rules), மக்களின் நடத்தை (Peoples behavior), விழிப்புணர்வு (Awareness)